I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
M.C.O.P.NO.228/2024

| | | |
|---|---|---|
| Name | : | Thasthageer |
| Father Name | : | Mubarak |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.02.2026

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்

விசாரணை தொடங்கிய நேரம் : 01.40 p.m

**முதல் விசாரணை**

நான் படிக்கவில்லை. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லித்தான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். வழக்கறிஞர் சொல்லி நான் தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ம.சா.ஆ. 1 – 28.07.2023 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை

ம.சா.ஆ. 2 – 19.11.2023 தேதியிட்ட 2 வது எதிர்மனுதாரர் Ashok Leyland Limited Bus Saloon KA –51–AF–6162 வாகனத்தின் ஆர்.சி புக்

ம.சா.ஆ. 3– 04.01.2010 தேதியிட்ட two wheeler Bajaj Plantina TN 23 AJ 0632 வாகனத்தின் ஆர்.சி புக்

ம.சா.ஆ. 4– 1 வது எதிர்மனுதாரரின் ஓட்டுனர் உரிமம்

ம.சா.ஆ. 5– 03.01.2023 தேதியிட்ட 2 வது எதிர்மனுதாரர் Ashok Leyland Limited Bus Saloon KA –51–AF–6162 வாகனத்தின் காப்பீடு சான்று–நகல்

ம.சா.ஆ. 6– 22.11.2018 தேதியிட்ட FC of Ashok Leyland Limited Bus Saloon KA –51–AF–6162

ம.சா.ஆ. 7– 01.08.2023 தேதியிட்ட மோட்டார் வாகன விபத்து ஆய்வறிக்கை –2 வது எதிர்மனுதாரர் Ashok Leyland Limited Bus Saloon KA –51–AF–6162

ம.சா.ஆ. 8– 11.08.2023 தேதயிட்ட மோட்டார் வாகன விபத்து ஆய்வறிக்கை– இருச்சக்கர வாகனம்

ம.சா.ஆ. 9– இறந்தவரின் விபத்து பதிவேடு

ம.சா.ஆ. 10– 29.07.2023 தேதியிட்ட பிரேத பரிசோதனை அறிக்கை

ம.சா.ஆ. 11– 07.08.2023 இறப்பு சான்று

ம.சா.ஆ. 12– இறந்தவரின் வாரிசு சான்று

ம.சா.ஆ. 13– இறந்தவரின் ஆதார் கார்டு நகல்

ம.சா.ஆ. 14– 1 வது மனுதாரரின் ஆதார் கார்டு நகல்

ம.சா.ஆ. 15– 2 வது மனுதாரரின் பிறப்பு சான்று நகல்

**3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பயணம் செய்தது இருச்சக்கர வாகனம் என்றால் சரிதான். இந்த இருச்சக்கர வாகனத்தில் நான், என் மனைவி, 2 பிள்ளைகள் பயணம் செய்தோம். இருச்சக்கர வாகனத்தில் 2 பேருக்கு மேல் பயணம் செய்தால் தவறு என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் சிக்கன் கடையில் வேலை செய்தேன் என்பதற்கும் எவ்வளவு வருமானம் வருகிறது என்று காட்டவும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் பாலாறு அருகே உள்ள தேசிய நெடுஞ்சாலை

என்றால் சரிதான். நான் வேலூரிலிருந்து போகும்போது அனைத்து வாகனங்களும் வடக்கிலிருந்து வரும் என்றால் சரிதான். அந்த இடத்தில் தேசிய நெடுஞ்சாலையை கடப்பதற்கு முன்பாக ஒரு ஸ்பீட் பிரேக்கர் உள்ளது என்றால் சரிதான். அதை தாண்டி தான் தேசிய நெடுஞ்சாலையை கடக்க முடியும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஸ்பீட் பிரேக்கர் தாண்டி என் வாகனத்தை நிறுத்தினேன் என்றாலும் அதனால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல, நான் நின்றிருந்தேன், கடக்கவில்லை.அப்போது வாகனம் இடித்தது.

விபத்தில் இறந்துபோன என் குழந்தைக்கு அப்போது வயது 5 ஆகும். என் மனைவியும் இறந்துவிட்டார். என் மனைவி இறப்பதற்கு முன்பு டெய்லரிங் வேலையும் சேமியா வேலையும் செய்து வந்தார் என்று காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் கொடுத்த புகாரில் என் மனைவி வீட்டு வேலை தான் செய்து வந்தார் என்றும் வேறு எந்த வேலையும் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

நான் ஓட்டி சென்ற இருச்சக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் சரிதான், வண்டி வாங்கி 1 வாரம் தான் ஆனது. காப்பீடு இல்லாமல் வண்டியை ஓட்டியது சட்டபடி தவறு என்றால் சரியல்ல. விபத்து சம்மந்தமாக போலீசார் தயார் செய்த வரைபடத்தில் விபத்து நடந்த இடம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வரைபடம் இது தான் என்று சாட்சி சொல்கிறார். அந்த ஆவணம் என் பெயரில் தான் கணினி வழியில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் **எ.ம.சா.ஆ. 1** ஆகும்.

இந்த வரைபடத்தின் முன்னிலைக்கு இந்த விபத்து என்

அஜாக்கிரதையால் தான் நடந்தது என்றால் சரியல்ல, நான் ஓரமாக தான் நின்று கொண்டிருந்தேன். விபத்து சம்மந்தமாக இன்று வரையில் நான் ஆற்காடு நீதிமன்றத்தில் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. இந்த ஓட்டுனர் மீது இன்று வரை வழக்கு நிலுவையில் உள்ளது தெரியுமா என்றால் தெரியாது. இந்த விபத்து முழுக்க முழுக்க என் அஜாக்கிரதையால் தான் நடைபெற்றது என்றால் சரியல்ல.

எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், என் மனைவி மற்றும் மகன் இறந்ததற்கோ 3 வது எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 01.45 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.02.24 18:27:58 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.